# SRI DURGADEVI DEVASTHANAM INC

Inc. in NSW Registration Number: INC 9878192 ABN: 55768913767
21 – 23 Rose Crescent Regents Park 2143 Tel No. 9644 6682 9746 9724
www.sydneydurga.com
c

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான சைவசமய அறிவுத் திறன் போட்டி 2018

### திருமுறை ஒப்புவித்தல் போட்டி

### அதிமேற்பிரிவு

இவற்றில் ஐந்து திருமுறைகள் கேட்கப்படும் ஆனால் ஆறு திருமுறைகளையும் மனனம் செய்திருத்தல் வேண்டும்.

1 தேவாரம்

பித்தாபிறை சூடிபெரு மானேஅருளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட் டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேன்எனல் ஆமே

2 திருவாசகம்

கடையவ னேனைக் கருணையி
        னாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
        டாய்விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தர
        கோசமங் கைக்கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்
        பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே

3 திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
        உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
        சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
        அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
        தொண்டனேன் விளம்புமா விளம்பே

தொடர்ச்சி மறுபக்கம் ....

4 திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வாருலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

5 புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலி திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

6 திருப்புகழ்

உம்பர்தருத தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.